## *கட்டாய இடமாற்றம் பற்றி விளக்கும் வரைபடம்: சென்னையின் கண்ணுக்கு தெரியாத அநியாயத்தை வெளிச்சம் காட்ட ஒரு முயற்சி*

சென்னையின் குடிசைவாழ் மக்களின் நிலையில் உடனடி மாற்றத்திற்கான கோரிக்கையை வைக்க வேண்டும். ஏழைகளை நம்பிக்கையுடனும் வாய்ப்புகளுடனும் வாழவைத்த சென்னை, இப்பொழுது அவ்வாறான நகரமாக இல்லை.

1971ஆம் ஆண்டில் மாநில அரசு தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் (முன்னேற்றம் மற்றும் நீக்குதல்) சட்டத்தை அமல் படுத்தியது. அரசு எவ்விதத்தில் குடிசைப்பகுதிகளில் தலையிடலாம் என்பதை குறித்த ஒரே சட்டம் இதுவாகும்: முதலில் சட்டத்தில் உள்ள வரையறையின் படி குடிசைப்பகுதியை அடையாளம் காண வேண்டும், பின்பு அதை அதிகாரபூர்வமாக குடிசைப்பகுதியாக அறிவிப்பு செய்ய வேண்டும், பின்பு அந்த குடிசைப்பகுதியை மேம்படுத்த வேண்டும். நகர அளவிலான கணக்கெடுப்பை தொடர்ந்து, 1971இல் அரசு 1,202 குடிசைப்பகுதிகளை அறிவிப்பு செய்தது, பின்பு 1985ஆம் ஆண்டில் 17 பகுதிகளை அப்பட்டியலில் சேர்த்தது. இத்தனை வருடங்களாக அரசு இப்பகுதிகள் இருக்கும் இடத்திலேயே அடுக்குமாடி கட்டிடங்களும் சாலை, சுகாதாரம், தண்ணீர் போன்ற வசதிகளை அளித்து வந்திருக்கிறது.

### *புதிய அணுகுமுறை: எல்லாரையும் அகற்று, ஒரு சிலருக்கு தொலைவில் மறுகுடியமர்வு அமைத்துக் கொடு*

ஆனால் 2004ஆம் ஆண்டில் நேர்ந்த சுனாமிக்குப்பிறகு குடிசைப்பகுதிகளில் அரசின் அணுகுமுறையில் ஒரு தெளிவான மாற்றத்தை காண முடிகிறது.

முதலாக, 1985இலிருந்து ஒரு குடிசைப்பகுதி கூட அங்கீகரிக்கப்படவில்லை: அதாவது, கடந்த 30 ஆண்டுகளாக குடிசைப்பகுதிகளில் குடிவந்த நூற்றாயிரகனக்கான மக்கள் சட்டத்துக்கு விரோதமாக வசித்து வருகிறார்கள். இந்த அங்கீகரிக்கப்படாத மக்கள் மனை பாதுகாப்பு மற்றும் தண்ணீர் மற்றும் கழிவறை போன்ற அடிப்படை வசதிகள் அன்றி வாழ்ந்து வருகிறார்கள்.

இரண்டாவதாக, மத்திய அரசு நிதிகளை பயன்படுத்தி தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் (TNSCB) புறநகரில் மூன்று பெருந்திரளான மறுகுடியமர்வு குடியிருப்புகளை செம்மெஞ்செரி, கண்ணகி நகர் மற்றும் பெரும்பாக்கத்தில் கட்டி உள்ளது. இவற்றில் மொத்தம் ஏறத்தாழ 35,000 வீடுகள் கட்டடப்பட்டுள்ளன, மீதம் குறைந்தது 13,000 வீடுகள் கட்டிவருகின்றன.

இந்த மறுகுடியமர்வு குடியிருப்புகள் அமைந்ததனால் நகர்ப்புற குடிசைபகுதிகளில் ஒரு புதிய அணுகுமுறை காணப்படுகிறது, தமிழ்நாடு குடிசைப்பகுதிகள் சட்டத்தின் அடிப்படியில் குடிசைப்பகுதிகளை அறிவித்து இருக்கும் இடத்திலேயே வசதிகள் அமைப்பதற்கு பதிலாக, அரசு குடிசைப்பகுதிகளை நகரத்திலிருந்து அகற்றி வருகிறது. அகற்றப் பட்ட சில மக்களுக்கு மட்டும் (அதாவது "தகுதி" உள்ளவர்களுக்கு மட்டும்) இந்த மறுகுடியமர்வு குடியிருப்புகளில் வீடுகள் வழங்கப் படுகின்றன.

இந்த கட்டாய இடமாற்றங்கள் பற்றி எந்த அதிகாரபூர்வமான பதிவுகள் செய்யப்படவில்லை, ஏனென்றால் அவை வெவ்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்காக வெவ்வேறு மாநில மற்றும் மாநகர துறைகளால் அமல் படுத்தப்படுகின்றன. அதாவது, கட்டாய இடமாற்றங்கள் கண்ணுக்கு தெரியாத அநியாயமாக நடைப்பெற்று வருகின்றன. எந்த நபரின் வீடு அழிக்கப்படுகிறதோ, அந்த நபர் மட்டுமே அறியும் அநீதியாக கட்டாய இடமாற்றங்கள் இயங்குகின்றன. இந்த அநீதியை வெளிச்சம் போட்டு காட்டவே, கடந்த 10 ஆண்டுகளாக நடந்து வரும் கட்டாய இடமாற்றங்களின் ஆய்வை CAGயில் அமைந்துள்ள டிரான்ஸ்பரன்ட் சிடீஸ் நெட்வொர்க் (Transparent Cities Network) நடத்தி வருகிறது. அந்த ஆய்வின் முதல் கட்ட கண்டுபிடிப்புகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

***ஆய்வில் கண்டறியப்பட்டவை - குடிசைப் பகுதிகளை அகற்றம் செய்வது மிகவும் பரவலாகவும், தன்னிச்சையாகவும் மேலும் பல நேரங்களில் கொடுமையாகவும் உள்ளது***

சென்னையில் 2005 முதல் 2015 வரை உள்ள காலக்கட்டத்தில் மட்டும் குறைந்தது 63 குடிசை பகுதிகள் அகற்றம் செய்யப்பட்டுள்ளன, இதில் சுமார் 30,293 குடும்பங்கள் (அல்லது 1,50,000 நபர்கள்) பாதிக்கப்பட்டுள்ளனர். மேலும் குறைந்தது 4,511 குடும்பங்கள் (அல்லது 22,500 நபர்கள்) மறுகுடியமர்வு செய்யப்படாமல் அதாவது குடிசை அகற்றம் செய்யப்பட்ட பிறகு வீடு இல்லாமல் விடப்பட்டனர். இந்த அகற்றப்பட்ட 63 குடிசைப்பகுதிகளில் குறைந்தது 7 குடிசைப்பகுதிகள் அரசால் அறிவிக்கப்பட்ட குடிசை பகுதிகள் என்பது குறிப்பிடத்தக்கது. ஆக அரசு அங்கீகாரம் கூட குடிசைபகுதிகள் அகற்றப்படுவதிலிருந்து பாதுகாப்புத்தர உதவுவதில்லை.
எங்கள் ஆய்வின் முடிவு அரசு குடிசைப் பகுதிகளை தன்னிச்சையான முறையில் அகற்றம் செய்து வருவதாக தெரிவிக்கிறது. அகற்றம் அகற்றம் பற்றி முன்னறிவிப்பு வேண்டிய காலகட்டம் குறிக்கப்படவில்லை, குடிசைகளை அகற்றம் செய்வதில் அரசின் பல துறைகள் ஈடுபடுவது குழப்பத்தைத் தருவதாக உள்ளது. மேலும் மருகுடியமர்வுக்கு தகுதி பெற எந்த விதமான தேதி சார்ந்த விதிமுறை (cutoff-date) இல்லாமல் இருப்பது, இழப்பீடு வழங்கவது குறித்தும் எந்த விதிமுறையும் இல்லை என்பதும், மேலும் எந்த நேரங்களில் அகற்றம் செய்ய வேண்டும் என்ற விதிமுறையும் இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. அகற்றப்பட்ட 63 குடிசைப் பகுதிகளில் மெட்ரோ ரயில் பணிகளுக்காக அகற்றபட்டப் குடிசைப் பகுதி மக்களுக்கு மட்டுமே இழப்பீட்டு தொகை வழங்கப்பட்டுள்ளது. மேலும் அகற்றப்பட்ட 62 குடிசைப் பகுதிகளில் வெறும் 6 பகுதிகளில் (அதாவது 10%க்கும் குறைவான பகுதிகள்) மட்டும் தான் அகற்றம் பற்றி முன்னறிவிப்பு செய்யப்பட்டது.

குடிசைப் பகுதிகளை அகற்றம் செய்யும் முறையில் நிறைய வேறுபாடுகள் இருப்பதற்கு காரணம் இந்த அகற்றம் அனைத்தும் தமிழ்நாடு குடிசைப்பகுதி சட்டத்தின் விதி முறைகளுக்கு அப்பாற்பட்டு இருப்பது. மேலும் தமிழ்

நாட்டில் பாதிக்கப்பட்ட மக்களின் மறுகுடியமர்வு மற்றும் மறுவாழ்விற்கென கொள்கை ஏதும் இல்லாமல் இருபதும் கருத்தில் கொள்ள வேண்டியது.

இந்த குடிசைபகுதிகள் நகரத்திற்கு மேம்பாலங்கள், ரயில் பாதைகள் போன்ற கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்தவும் நீர் வழித்தடங்களை அழகு படுத்தும் காரணங்களுக்காகவும் அகற்றம் செய்யப்பட்டன என்பதும் குறிப்பிடத்தக்கது. சில நேரங்களில் எந்த திட்டத்திற்காக குடிசைகள் அகற்றம் செய்யப்பட்டனவோ அந்த திட்டம் நிறைவேறாமல் போனதும் உண்டு எடுத்துக்காட்டாக துறைமுகம்-எண்ணூர் மேம்மட்டச்சாலை திட்டத்தை கூறலாம்.

30 வருடங்களாக குடிசைப்பகுதிகளுக்கு அரசு சட்டப்படிக் கொடுக்க வேண்டிய அங்கிகாரத்தை தராமல் இருப்பதால் ஆயிரக்கணக்கான ஏழை மக்கள் எந்த வசதியும் இல்லாத அறிவிக்கப்படாத குடிசைப் பகுதிகளில் வாழும் நிலை ஏற்பட்டுள்ளது. மாறாக அரசு நகரின் உட்புறங்களில் குடிசைப் பகுதிகளில் வாழும் ஏழை மக்களை வெளியேற்றி நகரின் புறம்பே கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்புகளில் மறுகுடியமர்வு செய்து வருகிறது. கடந்த 10 வருடங்களில் மட்டும் 63 குடிசைபகுதிகளைச் சேர்ந்த சுமார் 1,50,000 நபர்களின் வீடுகள் இடிக்கப்பட்டு அகற்றம் செய்யப்பட்டிருப்பது எங்களில் ஆய்வின் மூலம் தெரிய வந்துள்ளது. இப்படி சட்டப்பூர்வமான மலிவான வீட்டு வசதி ஏழை மக்களுக்கு நகரதிற்குள்ளேயே செய்துத்தரப்படவில்லை என்றால் வேலைத்தேடியும் கல்வி வாய்ப்பிற்காகவும் நகரத்திற்குள் வரும் ஏழை மக்கள் அரசு மற்றும் தனியார் நிலங்களில் குடியேறும் நிலை தொடரும், மேலும் அரசு மேற்கொள்ளும் குடிசைப் பகுதிகள் அகற்றமும் தொடரும் நிலை ஏற்படும்.

சென்னை மாநகரில் வாழும் ஏழை மக்கள் அவசர மாற்றங்களை கொண்டுவருவதற்கான கோரிக்கையை எழுப்ப வேண்டும். வசதி படைத்தவர்களுக்கு மட்டும் தான் நகரத்தில் வாழ உரிமை உண்டு, ஏழைகள் எல்லாம் நகரத்திற்கு வெளியே தள்ளப்பட வேண்டும் என்ற தீண்டாமைக்கு நிகரான ஒரு மோசமான நிலை சென்னை நகரத்தின் முற்போக்கான

பாரம்பரியத்திற்கு அழகு அல்ல. அரசின் ஒரு கணக்கெடுப்பின்படி அறிவிக்கப்படாத குடிசைப் பகுதிகள் சென்னையின் 2% நிலப்பரப்பை மட்டுமே கொண்டிருப்பதாக தெரியவந்துள்ளது - நமது நகரம் ஏழைகளின் மரியாதையை நிலைநாட்ட இந்த அளவிலான நிலத்தை கூட ஒதுக்கித் தர இயலாதா?

*ஆராய்ச்சி முறை (Methodology)*

இந்த ஆராய்ச்சியில் சமூக அமைப்புகள், ஆர்வலர்கள் மற்றும் மறுகுடியமர்வு குடியிருப்புவாசிகள் கொடுத்த அறிக்கைகளை, குறிப்பாக குடிசைப்பகுதி இருந்த இடம் மற்றும் பாதிக்கப்பட்ட மக்களின் கணக்கு போன்ற தகவல்களை பயன்படுத்தியுள்ளோம். எங்கள் குழு, இதில் பல இடங்களை நேரில் கண்டு, அருகில் இருக்கும் மக்களிடம் தகவல்களை சரிபார்த்துள்ளது. எங்கள் இந்த ஆராய்ச்சி முறையினால், எங்கள் புள்ளிவிவரங்கள் அனைத்தும் நிறைவானது என்று குறிப்பிடமுடியாது.